## இலங்கை அச்சீட்டு நிறுவகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்
இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

தலைமைக்காரியாலயத்தினதும் பேருவளைக் கிளையினதும் இயந்திரங்களை ரூபா 6,535,149 தொகைக்கு மீள்பெறுமதியிடப்படுவது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 (70) இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டிய விடயங்கள் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்கொடுத்தோருக்கு வரையப்பட்ட ரூபா 21,500 தொகையான 4 காசோலைகள் 6 மாதங்கள் கடந்தமையால் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் மீண்டும் கடன்கொடுத்தோராகவோ அல்லது வருமானமாகவோ கணக்கிடப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் செலவினத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 196,000 தொகையானதுடன் கணக்குகளில் ரூபா 96,000 தொகைக்கு மாத்திரமே ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 33,950 தொகையான கட்டிட பராமரிப்புச் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தவறான பதிவுகளைச் சீராக்குகையில் வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 16,520 தொகையானது வங்கிக் கட்டணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 13,238 தொகையால் குறைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 1,171,152 கூட்டுத்தொகையான பெறுவனவுகளுக்கும் ரூபா 2,998,049 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகளுக்கும் முறையே பெறுவனவுப் பற்றுச் சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலமாக காசேட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாக நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் காசேட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| செலுத்தவேண்டிய செலவினங்கள் | 620,296 | பட்டோலை |
| வங்கி மீதி | 2,841,278 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| கொடுப்பனவுகள் (காசாக) | 1,376,495 | விலைப்பட்டியல்கள், விலைகோரல்கள், கோவைகள் |
| கொடுப்பனவுகள் | 613,184 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் |
| சில்லறைக் காசின் மூலம் கொடுப்பனவுகள் | 182,426 | விலைப்பட்டியல்கள். |
| நாட்குறிப்புப் பதிவுகள் | - | அங்கீகாரம், உரிய தகவல்கள், விபரக் குறிப்பு |
| கண்காட்சிச் செலவினங்கள் | 134,709 | விலைப்பட்டியல்கள், மதிப்பீடு |

| | | |
|---|---|---|
| | | மற்றும் கோவைகள் |
| ஒலிப்பதிவு நாடாக்கள் தயாரிப்பு | 366,000 | மதிப்பீடு, விலைக் கோரல்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை |
| குளிரூட்டி மற்றும் கட்டிட பழுதுபார்த்தல் செலவினம் | 381,017 | மதிப்பீடு மற்றும் விலைக் கோரல்கள் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சீட்டு நிறுவக அதிகாரச்சட்டம் | |
| 14(4) ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தின் பெரும்பாண்மை எண்ணிக்கைக்காக 5 அங்கத்தவர்கள் இருக்கவேண்டிய போதிலும் பெரும்பாண்மை எண்ணிக்கை அல்லாது 5 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| 11 ஆம் பிரிவு | அரச கூட்டுத்தாபனத்தின் நிதியினை முதலீடு செய்வதற்காக உரிய அமைச்சரின் எழுத்துமூல அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,190,864 தொகை முதலீடு செய்யப்படுகையில் இதன் |

| | |
|---|---|
| | படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கை | |
| i. 5:2:1 ஆம் பிரிவு | 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான பாதீட்டுடன் எதிர்வுகூறப்பட்ட ஐந்தொகையும் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| ii. 5:2:5 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதிகள் உரிய அமைச்சிற்கும், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும், நிதி அமைச்சருக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii. 6:5:1 ஆம் பிரிவு | வருடாந்த அறிக்கையின் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| iv. 6:6 ஆம் பிரிவு | 2010 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/ஈ4/37/7/235/2 ஆம் இலக்க 2011 பெப்ரவரி 23 ஆம் திகதிய கடிதத்தின் 7 ஆம் பிரிவு | முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல. 30 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) இலங்கை சனநாயக | |

சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| i. | நி.பி 225(1) மற்றும் (2) | முறையான மாதிரிப் படிவம் இன்றி நிறுவகத்தினால் பயன்படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில், தயாரிப்பு, கொடுப்பனவு உறுதிப்படுத்தல், அங்கீகரித்தல், கொடுப்பனவு செய்தல் என்பவற்றிற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் கையொப்பம் இன்றி 1257 உறுதிச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| ii. | நி.பி 371(2)(இ) | நிறுவனத்தினால் குறித்த பணிக்கான துணை கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக ஒரு பதிவேடு பேணப்பட்டிராததுடன் முற்பணங்கள், பணி முடிவுற்றும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| iii. | நி.பி 371(3) | அச்சீட்டு நிறுவகத்தின் சில்லறைக் காசுக் கட்டுநிதி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி கொடுப்பனவுகளின் ஆகக் கூடிய எல்லை நிர்ணயிக்கப்பட்டிராமையால் சில்லறைக்காசு கட்டுநிதியில் ரூபா 1,000 முதல் ரூபா 4,710 வரையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 39 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2011 திசெம்பர் 31 ஆம் திகதி கட்டுநிதி மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iv. | நி.பி 395(இ) | ஒவ்வொரு மாத இறுதியில் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் நிலை தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| v. நி.பி 396(ஈ)(ii) | வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 12,000 தொகையான 2 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| IX ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் பாடநெறி களுக்காக விரிவுரைகளை நடாத்துகையில் அந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படும் கட்டணத்தில் 10% ஆன அரச பங்கீடு கழிக்கப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும் இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) அமைச்சுச் சுற்றறிக்கை | |
| ரீவீஈரீ/1/சீஜ/2004/1 ஆம் இலக்க 2004/1 சனவரி 28 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 1:1:1 ஆம் பிரிவு | ஆகக் குறைந்த எண்ணிக்கையிலும் குறைவான பயிலுனர்கள் உள்ள பாடநெறிகளை நடாத்துவதற்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத 10 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (எ) இல. 1530/3 ஆம் இலக்க் 2008 சனவரி 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | பெறுமதி ரூபா 25,000 இனைப் பார்க்கிலும் கூடிய கொடுப்பனவிற்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அனைத்து கொடுப்பனவுகளின் போதும் இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

உத்தியோகத்தர்களின் வருடாந்த லீவு மற்றும் மேலதிகநேர வேலைக் கொடுப்பனவு தொடர்பாக அரசாங்க நிதிப் பிரமாணம் மற்றும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதற்குப் பதிலாக கடைகள் மற்றும் காரியாலய ஊழியர்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதன் காரணமாக மீளாய்வாண்டின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவிற்காக ரூபா 50,419 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க அச்சீட்டு திணைக்களத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியில் இலங்கை அச்சீட்டு நிறுவகம் நடாத்தப்பட்டு வருவதுடன் மின்சார நடவடிக்கைகளின் பராமரிப்பு, மனைப் பொருட்களின் பராமரிப்பு மற்றும் கணனி ஆய்வுகூடம் ஆகிய பிரிவுகளின் பராமரிப்பிற்காக மூன்று ஊழியர்களுக்கு ஆண்டின் போது மாதாந்த அடிப்படையில் ரூபா 93,000 தொகை திணைக்கள அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 பெப்ரவரி 23 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ4/37/7/235/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் மூலம் 30(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் சகல உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அச்சுற்றறிக்கைக்கு முரணாக வேறு சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் வைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் சம்பளத்திற்காக ரூபா 601,320 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 3,111,389 மிகையை விளைவித்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,412,259 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,300,870 தொகையான வீழ்ச்சிக்குக் காரணமான விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | முரண் | | |
|---|---|---|---|
| | சாதகமானவை | பாதகமானவை | வேறுபாடு |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 929,452 | - | |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | - | 22,795 | |
| நிர்வாகச் செலவினம் | - | 715,714 | |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | - | 1,554,258 | |
| கிளைகளின் தேறிய மிகை/ பற்றாக்குறை | 62,445 | - | |
| | 991,897 | 2,292,767 | 1,300,870 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்காக தலைமைக் காரியாலயத்திற்கு 22 பாடநெறிகளும் கிளைகளுக்கு 3 பாடநெறிகளும் திட்டமிடப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட 06 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 6 பாடநெறிகளுக்காக 119 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிராமையால் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) பேருவளைக் கிளையில் 2011 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 50 ஆனதுடன் உள்ளபடியாகக் கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 09 ஆகும். இது எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் 18% ஆகும். இதன் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மாணவர்களின் எண்ணிக்கையில் குறைவு 244% அளவில் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அளவை அடைந்து கொள்வதற்கு முடியாது போன சதவீதம் 11% முதல் 80% வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| பாடநெறி | எதிர்பார்க்கப் பட்ட ஆட்சேர்ப்பு | உள்ளபடியான ஆட்சேர்ப்பு | இலக்கு எய்தப்படாமை | இலக்கு எய்தப்படாமை எதிர்பார்க்கப்பட்ட ஆட்சேர்ப்புக்களின் சதவீதமாக (%) |
| --- | --- | --- | --- | --- |
| ஓப் செட் லிதோ கிரபி (Offset Lithogrophy) | 30 | 21 | 9 | 30 |
| கணனி டைட் செட்டிங் மற்றும் டெஸ்க் டொப் வெளியீடு (Computer Typesetting and Desktop Publishing | 180 | 161 | 19 | 11 |
| இணையதள வடிவமைப்பு (Web Design) | 60 | 21 | 39 | 65 |
| நோன் லைனர் எடிடிங் (Non Liner Editing ) | 30 | 15 | 15 | 50 |
| கிரபிக் ஆர்ட் இன்டஸ்டிரிக்கான கணனி வன்பொருள் மற்றும் பீசீ அஸம்பிலி (Computer Hardware & PC Assembly for Graphic Art Industry) | 28 | 11 | 17 | 61 |
| எம் எஸ் ஒபிஸ் (MS Office) | 20 | 11 | 9 | 45 |
| அச்சீட்டு தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவ உயர் டிப்ளோமா Advance Diploma in Print Technology Management | 15 | 9 | 6 | 40 |
| Computer Graphic Designing (Matale) | 40 | 32 | 8 | 20 |
| Web Design (Matale) | 10 | 4 | 6 | 60 |
| Computer Graphic Designing (Beruwala) | 25 | 5 | 20 | 80 |
| Microsoft Office (Beruwala) | 10 | 4 | 6 | 60 |

**(உ) கிளைகளில் இருந்து ஒட்டுமொத்த இலாபத்திற்கான பங்களிப்பு குறைத்தல்**

பிரதான காரியாலயத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா 3,111,389 ஆக இருக்கையில் மாத்தளை கிளையின் இலாபம் ரூபா 86,870 ஆகவும் பேருவளை கிளையின் நட்டம் ரூபா 70,132 தொகையாகவும் காணப்பட்டது. இலங்கை அச்சீட்டு நிறுவகத்தினால் பேணப்பட்டுவரும் இவ்விரு கிளைகளிலிருந்து நிறுவகத்தின் ஒட்டுமொத்த இலாபத்திற்கான பங்களிப்பு மிகவும் குறைவான மட்டத்தில் நிலவியதுடன் 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பேருவளை கிளையில் இருந்து எவ்வித இலாபமும் பெறப்படாது செலவினம் ரூபா 70,132 ஆகக் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

**விரிவுரைக்கட்டணக் கொடுப்பனவு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. ஒவ்வொரு பாடநெறிக்குமான விரிவுரையாளர்களும் அறிவுறுத்துனருக்குமாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் இதற்காகப் பெறப்பட்ட அங்கீகாரம் உள்ளடக்கப்பட்ட ஓர் கோவை நிறுவகத்தினால் பேணப்பட்டிராததுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் செலுத்தப்பட்ட கட்டணம் 53 சந்தர்ப்பங்களின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ii. இவ்வாறே பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரைக் கட்டண அளவைப் பார்க்கிலும் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 6 மாத தெரிவுச் செவ்வையின் போது ரூபா 93,092 தொகை அவ்வாறு கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. விரிவுரையாளர்களுக்கு மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு மேற்கொள்கையில் வருகை தருவதனை மேவிய பின்னர் மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நிதியத்தினை குறைவாகப் பயன்படுத்தல்

மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்ட வருமானத்தில் பயன்படுத்தப்படாது ஆண்டின் இறுதியில் வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த தொகை ரூபா 2,452,805 என அவதானிக்கப்பட்டது. இத் தொகையினை முதலீடு செய்து வருமானத்தை உழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வங்கிக் கணக்கில் மாத ஆரம்பத்தில் நிலவிய மீதி மாதாந்தச் செலவினத்தைப் பார்க்கிலும் 4 மடங்கில் இருந்து 10 மடங்காக இருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிநுட்பக் கல்வி ஆணைக்குழுவில் இருந்து பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,999,975 தொகை உரிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமை காரணமாக அத் தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஏப்ரல் 20 ஆம் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிராத கூட்டுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னைய ஆண்டில் ரூபா 65,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இது கட்டுப்பாட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து இதனைத் திருத்துவதற்கு ரூபா 37,000 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும் இக் கூட்டுத்திட்டம் 2012 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் ஏடுகளைப் பேணுவதற்காகவும் கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காகவும் ரூபா 16,390 தொகையான சம்பளத்திற்கு ஓர் உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருக்கையில் வங்கிக் கணக்கிணக்கம் தயாரிப்பதற்காகவும் கணக்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 121,316 தொகை வெளித் தரப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 தாமதமான செயற்திட்டங்கள்**

இலங்கை அச்சீட்டு நிறுவகத்திற்கு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2004 திசெம்பர் 09 ஆம் திகதி அமைச்சரவைக்கு அங்கீகாரம் கிடைக்கபெற்றிருந்த போதிலும் 5 ஆண்டுகள் கடந்திருந்த நிலையிலும் இந் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன் உத்தேச காணியை கையேற்பதற்கான நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. காணியைக் கையேற்க முன்னர் கட்டிடத்திற்கான திட்ட வரைவிற்காக ரூபா 227,370 தொகை 2009 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**4 கணக்களிதன்மையும் நல்ஆளுகையும்**

**4.1 கூட்டுத்திட்டமும் அதன் செயற்பாடும்**

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதனை தயாரிக்க வெளித்தரப்பினர் ஒருவருக்கு கையளித்திருந்த போதிலும் இது வரையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

தலைமைக் காரியாலயம், மாத்தளை மற்றும் பேருவளை கிளைகளில் மீளாய்வாண்டு சம்பந்தமாக 18 விடயங்களின் கீழ் பாதீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கு மிகையாக ரூபா 1,769,161 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 10 விடயங்களின் கீழ் ரூபா 1,325,558 தொகையான சேமிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறே பாதீடப்படாத ரூபா 967,604 தொகையான வருமானமும் காணப்பட்டது. தலைமைக் காரியாலயம் மற்றும் கிளைக் காரியாலயங்களின் மதிப்பிடப்பட்ட பாடநெறி வருமானங்கள் முறையே ரூபா 1,053,390 ஆலும் ரூபா 740,850 ஆலும் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) திட்டம் தயாரித்தல்.

(இ) பாடநெறிகள் நடாத்தல்.

(ஈ) ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணல்

(உ) வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் காசேடு

(ஊ) உள்ளகக் கட்டுப்பாடு